[1981 மார்ச் 2

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களே பலர் இன்று அந்தத் துறையிலே வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் வேலையில் இருப்பவர்ளுக்கு மறுபயிற்சி கொடுப்பதற்காக முயற்சி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு ஆங்காங்கே காலியுள்ள இடங்களில் வேலை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்டவர்கள் அனேகமாக இருக்க மாட்டார்கள் என்பதால்தான் இந்தத் திட்டமே செயல்படுத்தப்படுகின்றது. அப்படி யாரேனும் இருந்தால் அவர்கள் தனிப்பட்ட முறையிலே கோரிக்கை வைப்பார்களேயானால் அது கவனிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, தற்போது ஊராட்சி பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்கள் டி.டி.சி. ட்ரெயினிங் கோர்ஸ் முடிக்காத காரணத்தால் அவர்களுக்கு இன்கிரிமெண்ட் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாரதிதாசன் பிறந்த நாள் விழா.

*வினா எண் 326—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டுதோறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்த கவிஞர் ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபாய் பணமும் விருதும் வழங்கப்பட்டு வந்தது, இவ்வாண்டு நிறுத்தப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1980 ஆம் ஆண்டு பாரதிதாசன் பிறந்தநாள் விழா நடைபெற இருந்த சமயம் இம்மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக்கப்பட்டதால் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் போது விழா மட்டும் நடத்தப்பட்டது. ஆனால் விருது ஏதும் வழங்கப்படவில்லை. எனவே பாவேந்தர் பாரதிதாசன் விருது 1980-ல் எவருக்கும் வழங்கப்பெறவில்லை.

1981 மார்ச் 2]

திரு. இரெ, இராசாமாணிக்கம் : தலைவரவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெயரால் வழங்கப்படுகின்ற விருது 1980 ஆம் ஆண்டு வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டாவது வழங்குவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு முயற்சி எடுக்கும்.

திரு. சி. த. சிதம்பரம : தலைவரவர்களே, புரட்சிக் கவிஞர் வழிவந்த கவிஞர் முடியரசன் அவர்களுக்கு ரூ. 10,000 பணமும் விருதும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அது, அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழு பரிசீலக்க வேண்டியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதி

* வினா எண் 327—திரு. ப. நெடுமாறன், திரு. என். பழனிவேல் திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் விடுதி கட்ட தமிழக அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதிக்காக மதுரை மாவட்டாட்சியர் தல்லாகுளம் பகுதியில் ஏழு ஏக்கர் நிலத்தை ஒதுக்குவதாகக் கூறியுள்ளார். நிலம் ஒதுக்கப்பட்ட பிறகு விடுதி கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவரவர்களே, மதுரை சட்டக்கல்லூரி அமைக்கப்பட்டதற்கு பின்னால் அமைக்கப்பட்ட கோவை சட்டக்கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டி முடித்தாகி விட்டது. ஆனால் மதுரையிலே மட்டும் இன்னும் மாணவர் விடுதி அமைக்கப்படவில்லை. மதுரைக்கு ஏராளமான கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் தங்கும் வசதி இல்லாமல் அவதியுறுகிறார்கள். ஆகவே, நடப்பாண்டிலேயாவது அந்த மாணவர் விடுதியைக் கட்டி முடிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டப்பட்டதாக சொல்லப்படுவது உண்மைக்கு மாறானது. அவர்களாகவே ஏதோ கட்டிடத்தை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS